**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.54/2015**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தாமோதரன் | மதம் | : இந்து |
| த/பெ | : வேணுகோபால் | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : ராமகிருஷ்ணாபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**11.03.2026**
**<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

5. 1ம் பிரதிவாதி நடராஜனும் நானும் கூட்டாக பயிர் செய்வதாக எனது பிராதிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எந்த பத்தியில் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்பது ஞாபகம் உள்ளதா என்றால் தெரியவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் அவ்வாறு எந்த விவரமும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி நடராஜனும் நானும் கூட்டாக என்ன பயிர் செய்தோம் என்பதையும் எனது பிராதிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சவுக்கு வைத்துள்ளேன். அவ்வாறு வழக்கு சொத்தில் சவுக்கு வைத்திருப்பதாக எனது பிராதிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். சவுக்கு மரம் எந்த வருடம் வைத்தேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என் தாத்தா இறந்த பின்பு வைத்தேன். அது எந்த வருடம் என்றால் 1980ல் இருந்து 2015 வரை வைத்திருந்தேன்.

6. சவுக்கு மரம் என்ன ஆனது என்றால் நடராஜன், பக்தவச்சலம் விற்றுவிட்டார்கள். எந்த தேதியில் விற்றார்கள் என்றால் ஞாபகமில்லை. யாருக்கு என்ன தொகைக்கு விற்றார்கள் என்றால் ஞாபகமில்லை.

உண்மையிலேயே நான் சொல்வதுபோல் நடந்திருந்தால் அதை எனது பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு என்ன வயதாகிறது என்றால் 37 ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் 35 என சொல்லியுள்ளேன் என்றால் போன முறை எனது வயதை 37 என்றுதான் சொல்லியுள்ளேன். 1976ல் நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். 1976ல் கண்ணம்ம நாயுடு குடும்பத்தில் பாகப்பிரிவினை நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

7. அந்த பாகப்பிரிவினையில் 1ம் பிரதிவாதி நடராஜனுக்கும் 1ம் வாதி பக்தவச்சல நாயுடுக்கும் பாகம் ஒதுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. பக்தவச்சல நாயுடுக்கு கொடுத்த பாகத்தை முன்னா நாராயணசாமி நாயுடு மகன் ராமசாமி நாயுடுவிற்கு விற்றுவிட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. பக்தவச்சல நாயுடு அவரது பாகத்தை விற்றுவிட்டு துரைசாமி நாயுடு ஆண்டாள் அம்மாளிடம் சொத்து வாங்கி அனுபவித்து வரும் விவரம் எனக்கு தெரியாது என்றால் அது பக்தவச்சல நாயுடு சுய சம்பாத்தியத்தில் வாங்கிய சொத்தாகும். பாகம் பிரிப்பதற்கு முன்பு பக்தவச்சல நாயுடு வாங்கினாரா அல்லது அதற்கு பின்பு வாங்கினாரா என்றால் பாகமே பிரிக்கவில்லை. பக்தவச்சல நாயுடு வாங்கிய சொத்துக்கள் இந்த வழக்கில் உள்ளதா என்றால் இல்லை.

8. நான் சொல்வதுபோல் பாகம் பிரிக்கவில்லை என்றாலும் பக்தவச்சல நாயுடு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்ற அடிப்படையில் இந்த வழக்கில் அதை சேர்த்திருக்க வேண்டும் என்றாலும் அவர் திருமணத்திற்கு பின்பு மாமியார் வீட்டிற்கு சென்று அங்கு அவர் சம்பாதித்த சொத்தாகும். பக்தவச்சல நாயுடு தனியாகதான் இருந்தார் என்றால் திருமணத்திற்கு பின்பு தனியாக இருந்தார். பக்தவச்சல நாயுடுக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் சரியான வருடம் தெரியவில்லை. 1980ஆ 1990ஆ என்றால் எனக்கு வருடம் சரியாக தெரியவில்லை. 1976லேயே பாகப்பிரிவினை ஆன பிறகு பக்தவச்சல நாயுடுவும் நடராஜ நாயுடுவும் தனியாகதான் இருந்தார்கள் என்றால் பக்தவச்சல

நாயுடு திருமணத்திற்கு பின்பு தனியாக இருந்தார்.

9. 40 வருட காலத்திற்கு பிறகு பாகப்பிரிவினை நடக்கவில்லை என்று 2015ல் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதால் காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் நாங்கள் கூட்டாகதான் பயிர் செய்து வந்தோம். ஊரில் மத்யஸ்தை வைத்து சொத்தை பிரித்து கொடுக்க கேட்டு அவர் ஒத்துவராததால் நீதிமன்றத்திற்கு வந்தோம். எந்த தேதியில் மத்யஸ்தம் யார் யார் முன்னிலையில் செய்தோம் என்றால் 2018ல் ஒரு முறை செய்தோம். 23 வருடங்களுக்கு முன்பு 3 முறை அவ்வாறு மத்யஸ்தம் நடந்தது. 23 வருடங்களுக்கு முன்பு எனக்கு என்ன வயது என்றால் 14 அல்லது 15 வயதாகும். மத்யஸ்தம் நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் அம்மா வந்த விவரம் எனக்கு தெரியும்.

10. மேற்படி விவரங்களை எனது பிராதிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. தற்போதுதான் சொல்கிறேன். 1ம் பிரதிவாதி ரோசம்மாளை திருமணம் செய்த போது சீதனமாக சில சொத்துக்களை கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆன பின்பு அவர் சுயமாக சில சொத்துக்களை கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சில சொத்துக்கள் அவர் வாங்கியுள்ளார். அது என்ன சொத்து என்று எனக்கு தெரியாது. நடராஜன் வாங்கிய சொத்திற்கு அவர் பெயருக்கு வருவாய் ஆவணங்கள் உள்ளது என்றால் ஆமாம். 2014ல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகளுக்கும் 1ம் பிரதிவாதியின் மூத்த மகன் வெங்கடேசனுக்கும் பிரச்சனை ஆனது என்றால் சரிதான். அதனால் பிரதிவாதிகள் மீது உள்ள கோவத்தினால் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. சொத்துக்களை கேட்டதால் அவர் சண்டைக்கு வந்தார்.

11. சொத்துக்களை கேட்டதால் தகராறு நடந்தது என்று ஏதேனும் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. மத்தியஸ்தம் மட்டும்தான் பேசினோம் யார்

முன்னிலையில் மத்தியஸ்தம் பேசினோம் என்றால் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேசினோம். உண்மையிலேயே ஊர் பெரியவர்கள் முன்னிலையில் மத்தியஸ்தம் பேசியிருந்தால் அவர்கள் பெயர் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வருவதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூட்டு அனுபவத்தின் அடிப்படையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. கண்ணம்ம நாயுடுவின் அனைத்து வாரிசுகளையும் சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன். கண்ணம்ம நாயுடுவின் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

12. கண்ணம்ம நாயுடுவின் வாரிசுகள் அனைவரையும் வாரிசுகளாக சேர்க்காததால் வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்கா தோஷத்திற்குள்ளானது என்றால் சரியல்ல. கண்ணம்ம நாயுடுவிற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் சேர்க்காததால் இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோஷத்திற்குள்ளானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு பொய்யானது என்றாலும் அது தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)